பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 09 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) மக்கள் பங்களிப்புடன் நீர்வள பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2) தரமான நிர்வாகத்தின்மூலம் நாட்டின் அடுத்தக்கட்ட வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3) தமிழகத்தில் காலியாக உள்ள ஒன்பதாயிரம் கல்லூரி பேராசிரியர் பணியிடங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் நிரப்பப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் கூறியுள்ளார்.

4) விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்மணிகளை மழையிலிருந்து பாதுகாக்க போர்க்கால அடிப்படையில் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

5) ஆசிய விளையாட்டுப் போட்டியின் பேட்மிண்டன் குழு பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>

மக்கள் பங்களிப்புடன் நீர்வள பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீலின் ''நீர்வள பாதுகாப்பு'' குறித்த கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துகொண்டுள்ள பிரதமர், தண்ணீரை சேமிப்பதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்கவும், நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான விஞ்ஞான ரீதியான தீர்வுகள் குறித்தும் நாம் முன்னெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் எழுதியுள்ள கட்டுரையில், பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற வகையிலான நீர் மேலாண்மைத் திட்டங்கள் குறித்தும், ஜல் ஜீவன் இயக்கம், நவாமி கங்கா இயக்கம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நீர் சேமிப்புத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துக்கூறியிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாநிலங்களிலும் மக்கள் பங்களிப்புடன் நீடித்த முயற்சிகளை மேற்கொள்வதால் எதிர்கால சந்ததியினருக்கான நீர் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்றும் திரு நரேந்திர மோடி தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தரமான நிர்வாகம் மற்றும் சேவையின் அடிப்படையில் நாட்டின் அடுத்தக்கட்ட வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அகில இந்திய நிர்வாகிகள் சங்க தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர், ஒவ்வொரு தொழிற்சாலை, சேவை மையங்கள், மருத்துவமனைகள், ஆராய்ச்சிக் கூடங்களில் உயர் தரத்திலான நிர்வாக கட்டமைப்பை கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலக அளவிலான வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிகள் அடுத்தக்கட்டத்திற்கு உயர்ந்துள்ள நிலையில், சிறப்பான நிர்வாகமும் அதற்கேற்ற வகையில் அமைய வேண்டும் என்று அவர் கூறினார்.

உலக அளவிலான பொருளாதார வளர்ச்சி குறைந்துள்ள போதிலும், இந்தியாவின் பொருளாதாரம் எட்டு சதவீத வளர்ச்சியை எட்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் பொருளாதாரம் வலுவாகவும், நிலையாகவும் உள்ளது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள ஒன்பதாயிரம் கல்லூரி பேராசிரியர் பணியிடங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் படிப்படியாக நிரப்பப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்,முதற்கட்டமாக நடைபெற்ற ஆசிரியர் தேர்வு வாரியத் தேர்வில், தேர்ச்சி பெற்றுள்ள 27 ஆயிரம் பேரில் 2 ஆயிரத்து 708 பேருக்கு பணி வழங்கப்படும் என்றும், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு தலா 3 ஆயிரம் பேர் என்ற அடிப்படையில் மொத்தம் உள்ள 9 ஆயிரம் காலிப்பணியிடங்களும் நிரப்பப்படும் என்று தெரிவித்தார்.

கௌரவ விரிவுரையாளர்களுக்கும் பேராசிரியர்களாக பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

உலகத் தரத்திலான உயர்கல்வியை உறுதி செய்யும் நோக்கில், தனியார் பல்கலைக்கழக மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது நிலுவையில் உள்ள பணிமூப்பு தொடர்பான அரசாணைகள் விரைவில் வெளியிடப்படும் என்றும்,

பேராசிரியர்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படும் என்றும் திரு விஸ்வநாதன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

காவிரி கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடையும் வகையில், முறைப்பாசனத்தை கைவிடுவது குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு வினோத் கூறியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூர்வாரும் பணிகள் நிறைவடைந்ததும் கிளை வாய்க்கால்களில் தண்ணீர் திறந்துவிடப்படும் என்றார்.

<<<<<<>>>>>

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, அரசு சேமிப்புக் கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ள நெல் மணிகளை மழையிலிருந்து பாதுகாக்க மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர் மாவட்டத்தில் 120 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், நெல் மூட்டைகளை பாதுகாக்க இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால்,

பொது வெளியில் அடுக்கிவைக்கப்பட்டுள்ள ஐந்து லட்சம் நெல் மூட்டைகள் தார்பாய் கொண்டு மூடப்படவில்லை என்றும், இதனால் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையில் நெல்மணிகள் நனைந்து சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நலன்கருதி அக்கறையோடு சுட்டிக்காட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஆளும் தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய அரசின் போஷான் அபியான் திட்டத்தின்கீழ், கர்ப்பிணி பெண்கள், தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு சேலம் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ஊட்டச்சத்து வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த திட்டத்தின்மூலம், **14** ஆயிரத்து **600**-க்கும் மேற்பட்ட பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து இணை உணவு வழங்கப்பட்டு வருவதாக ஊட்டச்சத்து திட்ட அதிகாரி திருமதி ராஷ்மிகா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — ராஷ்மிகா - 27 Sec. )***

போஷான் அபியான் திட்டத்தின்மூலம், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் காக்கப்படுவதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

***(Sound Byte — பயனாளிகள் — 34 Sec.)***

<<<<<<>>>>>

வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 64 Sec. )***

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கனிம வளங்கள் மற்றும் பிற பொருட்கள் சட்டவிரோதமாக கேரள மாநிலத்திற்கு கடத்தப்படுவதை தடுக்கும் பணிகளை சோதனைச்சாவடிகளில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு அன்ஷுல் நாகர் ஆய்வு செய்தார்.

-------------------

தருமபுரி மாவட்டத்தில் தேசத்திற்கான சமரசம் திட்டத்தின்கீழ், பொதுமக்கள் மத்தியில் சமரசம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் 64 நாட்களுக்கு பிறகு ரோப் கார் சேவை இன்று மீண்டும் தொடங்கியது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப்போட்டியின் பேட்மிண்டன் குழு பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா 3-0 என்ற கணக்கில் ஜப்பானை வென்றது.

ஆடவர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 16-1 என்ற கோல்கணக்கில் இலங்கையை வென்றது.

<<<<<<**END**>>>>>